<u>சார்பு நீதிமன்றம், இராணிப்பேட்டை, இராணிப்பேட்டை மாவட்டம்.</u>

**முன்னிலை.** திரு.S.முனுசாமி, பி.எஸ்ஸி., பி.எல்.,
சார்பு நீதிபதி (FAC), இராணிப்பேட்டை.

2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 27ம் நாள் வெள்ளிக்கிழமை.

**H.M.O.P.No.73/2025**
**CNR No.TNRP 03-000266-2025**

J. தனசேகரன் ... மனுதாரர்

/எதிர்/

M.மகாலட்சுமி ... எதிர்மனுதாரர்

இம்மனு கடந்த 02.03.2026 அன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்தபொழுது, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.D.தினகரன் அவர்கள் முன்னிலையானார். எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் எவரும் முன்னிலையாகி எதிருரை தாக்கல் செய்யவில்லை. எதிர்மனுதாரர் போதிய வாய்ப்பளித்தும் முன்னிலையாகாததால் தோன்றாதரப்பினராக அறிவிக்கப்பட்டார். மனுதாரர் தரப்பு வாதம் மற்றும் வழக்காவணங்களை பரிசீலனை செய்து, இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

## <u>உத்தரவு</u>

இம்மனுவானது மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்குமிடையே கடந்த 15.04.2022 அன்று நடைபெற்ற திருமணத்தை ரத்து செய்து விவாகரத்து வழங்க கோரி மனுதாரரால் இந்து திருமண சட்டம் 1955 பிரிவு 13(1)(ia)(ib)-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## I. <u>மனுவின் சுருக்கம்.</u>

i. மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்குமிடையே கடந்த 15.04.2022

அன்று, இந்து முறைப்படி, பெரியோர்கள் முன்னிலையில், காட்பாடி தாலுக்கா, வள்ளிமலை, குலாலர் திருமண மண்டபத்தில் திருமணம் நடைபெற்றது.

ii. மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் திருமண வாழ்க்கை ஆரம்பத்திலிருந்தே சுமூகமாக இல்லை. திருமணத்திற்கு பின்னிட்டு, மனுதாரரும், எதிர்மனுதாரரும் சில மாத காலம் மட்டுமே கணவன் மனைவியாக வாழ்ந்து வாந்தனர். பின்னிட்டு, எதிர்மனுதாரர் நள்ளிரவில் கூட வேறு சிலருடன் செல்போனில் பேசிக்கொண்டு இருந்தார். மனுதாரர் அதை கேட்டதற்கு எதிர்மனுதாரர் தன் சகோதரருடன் பேசியதாக கூறினார். எதிர்மனுதாரர் பேசிய எண்ணை ட்ரூ காலரில் சரிபார்த்தபொழுது, அதில் அந்த நபரின் பெயர் காஞ்சிபுரத்தை சேர்ந்த கார்த்தி என வந்தது. ஆனால், எதிர்மனுதாரர் அந்த எண்ணை கவி என்ற தவறான பெயரில் சேவ் செய்திருந்தார்.

iii. கடந்த 10.05.2022 அன்று எதிர்மனுதாரர் கர்ப்பமாக இருப்பதாக மனுதாரருக்கு தெரியவந்தது. மனுதாரருக்கு தெரிவிக்காமல் எதிர்மனுதாரர் அடுக்கம்பாறை அரசு மருத்துவமனைக்கு சென்று, அந்த கரு கார்த்தியினுடைய கருவாக இல்லாததால், அதனை ஏற்க மறுத்து கருகலைப்பு செய்தார். திருமணத்திற்கு பிறகு எதிர்மனுதாரரின் குடும்பத்தில் ஒத்துழைப்பு இல்லாததால் பல சிக்கல்கள் ஏற்பட்டன. எதிர்மனுதாரர், மனுதாரரிடமும் அவரது பெற்றோரிடமும் மரியாதையாக நடந்துகொள்ளவில்லை. திருமணமான நாளிலிருந்து எதிர்மனுதாரர் மேற்கண்ட கார்த்தி என்பவருடன் சட்ட விரோதமான உறவில் இருந்தார். மனுதாரரின் குடும்ப நலனை கவனிக்கவில்லை. கடந்த 25.05.2023 அன்று எதிர்மனுதாரர், எந்தவித காரணமும் கூறாமல் திருமண வீட்டை விட்டு வெளியேறிவிட்டார். எதிர்மனுதாரர், அவரது பெற்றோரின் தவறான

அறிவுரையின் காரணமாக, கடந்த 3 ஆண்டுகளாக மனுதாரரை முற்றிலுமாக கைவிட்டு பெற்றோர் வீட்டில் வசித்து வருகிறார்.

iv. கடந்த 07.02.2025 அன்று, மனுதாரர், எதிர்மனுதாரருக்கு ஒரு சட்ட அறிவிப்பை அனுப்பினார். இம்மனுவில், வழக்கு தரப்பினர்களுக்கிடையே எவ்வித மறைமுக உடன்படிக்கையும் இல்லை.

v. எனவே, இனியும் மனுதாரர் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ வாய்ப்பில்லை என்பதால், மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்குமிடையே கடந்த 15.02.2022 அன்று, நடைபெற்ற திருமணத்தை கொடுமைப்படுத்தல் மற்றும் கைவிடுதல் ஆகியவற்றின் அடிப்படையில் ரத்து செய்து விவாகரத்து வழங்க கோரி மனுதாரர் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

II. எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் எவரும் முன்னிலையாகி எதிருரை தாக்கல் செய்யவில்லை. எதிர்மனுதாரர் போதிய வாய்ப்பளித்தும் முன்னிலையாகாததால் தோன்றாதரப்பினராக அறிவிக்கப்பட்டார்.

III. எழுவினா ;

இம்மனுவில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில், மனுதாரர், மனுவில் கோரியவாறு விவாகரத்து பரிகாரம் பெற உரிமையுடையவரா? என்பதேயாகும்.

IV. சாட்சியம் ;

1. மனுதாரர் முன்னிலையாகி எழுத்து மூல சாட்சியம் தாக்கல் செய்து தன்னை ம.சா.1 ஆக விசாரித்துக்கொண்டார். மனுவில் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் குறித்து சாட்சியம் அளித்துள்ளார். இவர் மூலம் ம.சா.ஆ.1 முதல்

7 வரை குறியீடு செய்யப்பட்டுள்ளன. இத்துடன் மனுதாரர் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

V. நீதிமன்ற தீர்மானம் ;

மனுதாரர் தரப்பு வாதம் மற்றும் ஆவணங்கள் கவனத்துடன் பரிசீலிக்கப்பட்டது.

i. மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் இடையே கடந்த 15.04.2022 அன்று பெரியோர்கள் முன்னிலையில், இந்து முறைப்படி, திருமணம் நடைபெற்றுள்ளது. இதனை நிரூபிக்கும் விதமாக திருமண அழைப்பிதழ் (ம.சா.ஆ.1) மற்றும் மனுதாரர்களின் திருமண புகைப்பட நகல் (ம.சா.ஆ.2) தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ii. ம.சா.1 சாட்சியத்தை பரிசீலிக்கையில், திருமணத்திற்கு பின்னிட்டு, மனுதாரருடன், எதிர்மனுதாரர் சில மாத காலம் மட்டுமே அமைதியான முறையில் குடும்பம் நடத்தி வந்துள்ளார். பின்னிட்டு, எதிர்மனுதாரர் வேறு ஒரு நபருடன் போனில் பேசிவந்தது மனுதாரருக்கு தெரியவந்துள்ளது. நள்ளிரவில் கூட அந்த நபருடன் எதிர்மனுதாரர் போனில் பேசி வந்ததால், மனுதாரர் அதுகுறித்து எதிர்மனுதாரரிடம் கேட்டுள்ளார். அதற்கு எதிர்மனுதாரர் தன் சகோதரருடன் பேசியதாக தெரிவித்துள்ளார். ட்ரூ காலரின் மூலம், அந்த எண்ணானது காஞ்சிபுரத்தை சேர்ந்த கார்த்தி என்பவருடையது என மனுதாரர் கண்டுள்ளார். ஆனால், எதிர்மனுதாரர், அந்த எண்ணை கவி என தவறான பெயரில் சேவ் செய்து வைத்துள்ளார்.

iii. கடந்த 10.05.2022 அன்று எதிர்மனுதாரர் கர்ப்பமாக இருப்பது

மனுதாரருக்கு தெரியவந்துள்ளது. மனுதாரருக்கு தெரிவிக்காமல், எதிர்மனுதாரர் அடுக்கம்பாறை அரசு மருத்துவமனைக்கு சென்று, அந்த கரு கார்த்தியினுடையது இல்லை என்பதால், கருகலைப்பு செய்துள்ளார்.

iv. எதிர்மனுதாரர் அவரது பெற்றோரின் தவறான அறிவுரைகளினால், மனுதாரருக்கும், அவரின் பெற்றோருக்கும் மரியாதை கொடுக்காமலும், மனுதாரரின் குடும்ப நலனை கவனிக்காமலும் இருந்ததாகவும், மேலும், கார்த்தி என்பவருடன் தவறான உறவில் இருந்து வந்ததாகவும், கடந்த 25.05.2023 அன்று எவ்வித காரணமுமின்றி திருமண வீட்டை விட்டு வெளியேறி தன் பெற்றோர் வீட்டில் கடந்த 3 ஆண்டுகளாக மனுதாரரை கைவிட்டு பிரிந்து வசித்து வந்ததாகவும், கடந்த 07.02.2025 அன்று, மனுதாரர், எதிர்மனுதாரருக்கு ஒரு சட்ட அறிவிப்பை அனுப்பியதாகவும் சாட்சியம் அளித்துள்ளார். மனுதாரரின் சாட்சியத்தை மறுக்கும் விதமாக எதிர்மனுதாரர் தனது தரப்பு சாட்சியத்தை முன்னிலைப்படுத்தவில்லை.

v. எதிர்மனுதாரரின் தொடர் கொடுமைகளால், மனுதாரர் மிகவும் மனரீதியாக பாதிப்படைந்துள்ளார் என்பதை மனுதாரர் தரப்பில் சாட்சிய, சான்றாவணங்கள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

VI. முடிவாக,

i. இம்மனு அனுமதிக்கப்பட்டு, மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் இடையே கடந்த 15.04.2022 அன்று நடைபெற்ற திருமணத்தை ரத்து செய்து விவாகரத்து (on the ground of cruelty and desertion) வழங்கி உத்தரவிடப்படுகிறது.

ii. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்தர்–தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் சரி பார்க்கப்பட்டு, 2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 27ம் நாள் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

ஒம்./– திரு.S.முனுசாமி
சார்பு நீதிபதி (FAC),
இராணிப்பேட்டை.

<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள்.</u>

| | | |
|---|---|---|
| 1 | திரு.தனசேகரன் | ம.சா.1 |

<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்.</u>

| | | | |
|---|---|---|---|
| 1 | திருமண அழைப்பிதழ் | அசல் | ம.சா.ஆ.1 |
| 2 | திருமண புகைப்படம் | நகல் | ம.சா.ஆ.2 |
| 3 | எதிர்மனுதாரரின் அல்ட்ராசவுண்ட் ரிப்போர்ட் | அசல் | ம.சா.ஆ.3 |
| 4 | அரசு மருத்துவமனை, அடுக்கம்பாறை வழங்கிய Referral slip | அசல் | ம.சா.ஆ.4 |
| 5 | மனுதாரர், எதிர்மனுதாரருக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு | அலுவலக நகல் | ம.சா.ஆ.5 |
| 6 | எதிர்மனுதாரருக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு பதிவு அஞ்சல் மூலம் அனுப்பியது, வாங்காததால் திருப்பி வந்த அஞ்சல் உறை | அசல் | ம.சா.ஆ.6 |
| 7 | மனுதாரரின் அதார் அட்டை | நகல் | ம.சா.ஆ.7 |

<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :</u> இல்லை.

ஒம்./– திரு.S.முனுசாமி
சார்பு நீதிபதி (FAC),
இராணிப்பேட்டை.

<u>வரைவு/சீரான உத்தரவு</u>
H.M.O.P. No.73/2025
Date: 27.03.2026